# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ).

.....

முறையீட்டு மனு எண்: 216/மா/2018
ஆணை நாள்: 23–04–2019

**திரு. எம். கண்ணன்,**
**திண்டுக்கல்.** --- முறையீட்டு மனுதாரர்

**ஆணையர்,**
**திண்டுக்கல் மாநகராட்சி.** --- எதிர் மனுதாரர்

திண்டுக்கல் மாநகராட்சி, செல்லாண்டியம்மன் கோவில் வடக்குத் தெரு எண்.162 என்ற முகவரியில் வசிக்கும் திரு. எம். கண்ணன் என்பவரது 11.10.2018 நாளிட்ட முறையீட்டு மனு 16.10.2018 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, முறையீட்டு மனு எண்.216/18 என எண்ணிடப்பட்டு, முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டு, திண்டுக்கல் மாநகராட்சி ஆணையிடம் அறிக்கை பெற்று பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணையிடப்படுகிறது.

## ஆணை:

திண்டுக்கல் மாநகராட்சி, செல்லாண்டியம்மன் கோவில் வடக்குத் தெரு, எண்.162 என்ற முகவரியில் வசிக்கும் திரு. எம். கண்ணன் என்பவர் தனது 11.10.2018 நாளிட்ட முறையீட்டு மனுவில் திண்டுக்கல் மாநகராட்சியில் துப்புரவு பணியாளராக பணிபுரிந்து 2015-ஆம் ஆண்டு பணியிலிருந்து ஓய்வு பெற்றுள்ளதாகவும், தனக்கு வழங்கப்பட வேண்டிய ஓய்வூக்கால பணப்பயன்கள் ரூ.7 லட்சம் வழங்கப்படாமல் உள்ளதாகவும், தனக்கு பிறகு ஓய்வு பெற்றவர்களுக்கு ஓய்வுக்கால பணப்பயன்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும், தனக்கு வழங்கப்பட வேண்டிய ஓய்வுக்கால பணப்பயன் நிலுவைத் தொகை முழுவதும் வழங்க ஆணையிடுமாறு கோரியுள்ளார்.

முறையீட்டு மனுதாரரின் முறையீட்டு மனு மீதான அறிக்கையினை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பிக்க திண்டுக்கல் மாநகராட்சி ஆணையருக்கு 23.10.2018 மற்றும் 20.3.2019 நாளிட்ட அறிவிப்பாணைகளின்படி ஆணையிடப்பட்டது.

ஆணையர், திண்டுக்கல் மாநகராட்சி தனது 22.03.2019 நாளிட்ட அறிக்கையில் மனுதாரருக்கு வழங்கவேண்டிய ஒய்வுக்கால பணப்பயன் நிலுவைத் தொகையில் மாநகராட்சியின் நிதி நிலையினைக் கருத்தில் கொண்டு ரூபாய் 1,11,760/- கார்ப்ரேஷன் வங்கி காசோலை எண்.245204 நாள் 30.10.2018ன்படி வழங்கப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார்.

இந்நேர்வில், முறையீட்டு மனுதாரரின் கோரிக்கை மற்றும் திண்டுக்கல் மாநகராட்சி ஆணையரின் அறிக்கை ஆகியவைகள் பரிசீலிக்கப்பட்டது. முறையீட்டு மனுதாரர் பணியிலிருந்து 31.7.2015 அன்று ஓய்வு பெற்று 44 மாதங்கள் கடந்துவிட்டது. திண்டுக்கல் மாநகராட்சி ஆணையரின் அறிக்கையில் மாநகராட்சியின் நிதி நிலையினைக் கருத்தில் கொண்டு ஓய்வுக்கால பணப்பயன் நிலுவைத் தொகையில் ரூ.1,11,760/- மனுதாரருக்கு வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. முறையீட்டு மனுதாரர் பணி ஓய்வு பெற்று 44 மாதங்கள் கடந்துவிட்ட நிலையில் முறையீட்டு மனுதாரருக்கு வழங்கப்பட வேண்டிய ஓய்வுக்கால பணப்பயன் நிலுவைத் தொகையினை முன்னுரிமை அளித்து மனுதாரருக்கு வழங்கிவிட்டு, அதன் விபரத்தினை அறிக்கையாக இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பிக்க திண்டுக்கல் மாநகராட்சி ஆணையருக்கு அறிவுறுத்தி அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2019-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 23-ஆம் நாளன்று என்னால் கையொப்பமிட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

1. திரு. எம். கண்ணன்,
162, செல்லாண்டியம்மன்
கோவில் வடக்குத் தெரு,
திண்டுக்கல் – 624 001.

2. ஆணையர்,
திண்டுக்கல் மாநகராட்சி,
திண்டுக்கல்.

நகல்

முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்
பிரிவு அலுவலர் (நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு 3
இ. கோ. / உதரி